**செய்தி வெளியீடு எண்: 739** **நாள்: 08.06.2024**

**உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பொது விநியோக திட்டம், நுகர்வோர் பாதுகாப்பு, நேரடி நெல், கேழ்வரகு கொள்முதல், அரிசி கடத்தல் தடுப்பு மற்றும் துறையின் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் – மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இன்று (08.06.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களின் தலைமையில் கூட்டுறவு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறைத் தலைமை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் தற்போது அனைத்து அட்டைதாரர்களும் ஒருமுறை கடைக்கு வருகை தந்து அனைத்து பொருட்களையும் பெற்று செல்லும் வண்ணம் நியாய விலைக் கடைகளுக்கு போதுமான அளவில் இன்றியமையா பொருட்கள் அனுப்புவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், நியாய விலைக் கடையினை தணிக்கை செய்யும் அலுவலர்கள் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் உரிய தரத்துடன் இருப்பதனை உறுதி செய்து அட்டைதாரர்களுக்கு தரமான உணவுப் பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார். மேலும், நியாய விலைக் கடைகள் குறித்த நேரத்தில் செயல்பட வேண்டும் என்றும், இருப்பில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் சுத்தம் மற்றும் சுகாதாரமான முறையில் சேமித்து வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்.

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நியாய விலைக் கடைகளுக்கு வரஇயலாத நிலையில் அங்கீகரிக்கப்பட்ட நபர் வாயிலாக உணவுப் பொருட்கள் பெறும் முறை எவ்வித தொய்வும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அத்தகைய அட்டைதாரர்கள் சிரமம் இன்றி உணவுப் பொருட்கள் பெறுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், குடும்ப அட்டைதாரர்கள் வசதிக்கென மே 2021 முதல் மே 2024 முடிய 727 முழு நேர மற்றும் 1330 பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக தேவைப்படும் இடங்களில் நியாய விலைக் கடைகள் புதிதாக திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் ஏதேனும் சிரமம் ஏற்படின் அல்லது புகார் தெரிவிக்க விரும்பினால் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1800 425 5901 மற்றும் 1967 ஆகிய தொலைபேசி எண்களில் புகார்கள் தெரிவிக்கலாம் என்றும் இப்புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறைகள் உடனுக்குடன் சரி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டப்படி வரையறை செய்யப்பட்டுள்ள நேர்மறையற்ற வணிக முறை மற்றும் தரமற்ற சேவைகள் தொடர்பான புகார்கள் மாவட்ட மற்றும் மாநில அளவில் செயல்படும் நுகர்வோர் குறை தீர் ஆணையங்கள் முன்பாக சமர்ப்பிக்க நுகர்வோர்கள் முன்வர வேண்டும் அதன் மீது உரிய விசாரணை மேற்கொண்டு நுகர்வோர் பிரச்சனைகள் தீர்வு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கே.எம்.எஸ் 2023–24 கொள்முதல் பருவத்தில் 3157 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 28.57 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 3,66,726 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்று தெரிவித்ததோடு கோடை விவசாயத்தில் விளையும் நெல் மணிகளை உடனுக்குடன் கொள்முதல் செய்ய அறிவுறுத்தினார். நெல் கொள்முதலில் எவ்வித முறைகேடுக்கும் இடமின்றி செயல்பட்டு கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகள் திடீரென பெய்யும் மழையினால் நனையாத வண்ணம் பாதுகாத்து உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்பி தரமான அரிசி நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புவதை உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மேலும், கேழ்வரகு கொள்முதலை அதிகப்படுத்தி தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்ட அங்காடிகளுக்கு அனுப்பி மக்களிடம் சிறுதானிய பயன்பாட்டின் நன்மைகளை தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தினார். நியாய விலை அங்காடிகளில் மே மற்றும் ஜூன் மாதத்திற்கான துவரம் பருப்பு, பாமாயில் எண்ணெய், அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகியன போதுமான அளவில் இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு எவ்வித புகாருக்கும் இடமின்றி வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். கட்டுமான பணிகளை துரிதப்படுத்தி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வட்ட செயல் முறை கிடங்குகள் ஆகியவற்றை உடனடியாக கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். அனைத்து பொருட்களையும் இருப்பு வைத்து அமுதம் பல்பொருள் அங்காடிகள் விற்பனையினை அதிகரிக்க வேண்டும் எனவும் சுற்றுப் புறத்தை தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் 60 இடங்களில் 272 சேமிப்பு கிடங்குகளுடன் 7.71 லட்சம் மெ.டன் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் புதுக்கோட்டை, திருமங்கலம், ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் ரூ. 7.20 கோடி மதிப்பீட்டில் தலா 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட 3 சேமிப்பு கிடங்குகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 203 மாற்றத்தக்க சேமிப்பு கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு (Depositor) வழங்கியதன் மூலம், சரக்கு வைப்பாளர்கள் ரூ.45.36 கோடி கடன் வசதி பெற்று பயனடைந்துள்ளனர்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலை தடுப்பதற்கு பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை பாராட்டி அரிசி கடத்தலை தடுக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அண்டை மாநிலங்களுக்கு இடையேயான அரிசி கடத்தலை தடுக்க மாநில எல்லைகளில் சோதனை சாவடிகளில் காவல் துறை கண்காணிப்பை அதிகப்படுத்தி அண்டை மாநில காவல் உயர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தி அரிசி கடத்தலே இல்லாத மாநிலமாக திகழ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையாளர் திரு. ஹர்சகாய் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் திரு. சு. பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் துறை தலைவர் திரு. க. ஜோஷி நிர்மல் குமார், இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளர் (சந்தை) திரு. ரெ. சதிஷ், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in